பக்கங்கள் 13 + 03

# மாலை முரசு

## 113 பேருடன் எப்படி ஆட்சி அமைப்பீர்கள்?

**தமிழக ஆளுநர் தொடுத்த கேள்விக்கு விஜய் விளக்கம்**



(விரிவான செய்தி 11 ஆம் பக்கத்தில்)

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | சித்திரை 24 வியாழக்கிழமை 07.05.2026 | அதிர்வு 281

**‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது**

இங்கே CLICK செய்யவும்








# தோட்டத் தொழிலாளர்கள் மீதான அடக்குமுறை: நாடாளுமன்றில் சஜித், மனோ, ஜீவன் கூட்டுக் குரல்!

**தாக்குதல்களை அனுமதிக்க முடியாது; சட்டம் தன் கடமையைச் செய்யும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் திட்டவட்டம்**

(ஆர்.சனத்)

“மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களை நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். தோட்ட அதிகாரியா, தொழிலாளியா என்பது முக்கியமல்ல. சட்டமென்பது அனைவருக்கும் சமம்.”

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் இன்று திட்டவட்டமாக அறிவித்தார்.

நாடாளுமன்றம் இன்று 02▶

# மக்கள் வழங்கிய ஆணையை மதியுங்கள்; விஜயைப் பதவியேற்க அனுமதியுங்கள்!

**ஆளுநரின் மெத்தனப்போக்குக்குத் திருமாவளவன் கண்டனம்**

**தமிழக சட்டசபைத் தேர்தலில் 108 இடங்களைக் கைப்பற்றிப் பெரும்பான்மை பலத்துடன் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ள த.வெ.க தலைவர் விஜயை, ஆட்சி அமைக்க ஆளுநர் அழைக்காதமைக்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்து** 02▶





# தோட்ட மக்களின் பாதுகாப்பு: முத்தரப்பு சந்திப்புக்கு ஏற்பாடு

**கம்பனி பிரதானிகள், பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு அழைப்பு**

(ஆர்.சனத்)

“மலையக மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. தோட்ட அதிகாரிகள், பொலிஸாரின் பங்கேற்புடன் கூட்டமொன்றை நடத்துவதற்குரிய ஏற்பாட்டைச் செய்வதற்குத் தயார்.”

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இரத்தினபுரி – நீலகாமம், மஸ்கெலியா – மொக்கா தோட்டம், நுவரெலியா – டெல்மா தோட்டம் ஆகிய பகுதிகளில் தோட்ட நிர்வாக தரப்பினரால், 03▶



## தோட்டத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியது.

ஆரம்ப கட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பினார்.

மஸ்கெலியா, மொக்கா தோட்டத்தில் தோட்ட தொழிலாளி ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் கருத்து வெளியிட முற்பட்டார்.

எனினும், இது ஒழுங்குப் பிரச்சினை அல்ல என்பதால் அடுத்த கட்ட நடவடிக்கைக்குச் செல்லுமாறு சபாநாயகர், சபை முதல்வரிடம் கூறினார்.

**சபை முதல்வர் பிமல்**

இதன்போது எழுந்த சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க,

“இது அவசர பிரச்சினையென்றால் நிலையியற் கட்டளைச் சட்டம் 27,2 இன்கீழ் அது தொடர்பில் கேள்வி எழுப்பி இருக்கலாம்.

தோட்டத் தொழிலாளர்கள் மட்டும் அல்ல நாம் அனைவருக்கும் பொறுப்புக்கூறும் அரசு.” – என்று சுட்டிக்காட்டினார்.

“தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டாம் எனக் கூறியவர்கள் இவர்கள். இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் சஜித் தரப்பினர் சென்று முறையிட்டனர்.

மனோ கணேசன், நீங்கள் அவர்களுடன் அல்ல, எங்களுடனேயே இருக்க வேண்டும்.” – என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித்**

இதனையடுத்து மீண்டும் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார் சஜித் பிரேமதாஸ.

“மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வுக்கு எதிராக நான் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்கு சென்றதாக சபை முதல்வர் கூறுகின்றார். இது அப்பட்டமான பொய்யாகும். இந்தக் கூற்றை அவர் வாபஸ் பெற வேண்டும்.” – என்றார் சஜித்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வர், அமைச்சர் பிமல் ரத்நாயக்க,

“சம்பள அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள், அவர்களின் எம்.பிக்கள் சென்று முறையிட்டனர். எனவே, இதற்காக முதலில் நீங்கள் (சஜித்) மன்னிப்புக் கோரவும்.” –என்றார்.

**ஜீவன் தொண்டமான் எம்.பி.**

இதன்போது கருத்து வெளியிட்ட இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான்,

“மஸ்கெலியா மொக்கா மிட்லோதியன் தோட்டத்தில் கடந்த 5ஆம் திகதி சிவக்குமார் என்ற தொழிலாளர் தாக்கப்பட்டுள்ளார்.

டெல்மார் நடுப்பிரிவு தோட்டத்தில் நேற்று சிறீதரன் என்ற தொழிலாளரும் தோட்ட முகாமையாளரால் தாக்கப்பட்டுள்ளார்.” – என்று சுட்டிக்காட்டினார்.

**அமைச்சர் ஆனந்த விஜேபால**

“மேற்படி விடயம் தொடர்பில் ஆராய்ந்து 30 நிமிடங்களுக்குள் விளக்கம் அளிக்கப்படும்.” – என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டார்.

**மனோ கணேசன் எம்.பி.**

இதன்போது எழுந்த மனோ கணேசன் எம்.பி., மொக்கா மற்றும் டெல்மா தோட்டங்களில் தொழிலாளர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைச் சுட்டிக்காட்டினார்.

“தோட்ட முகாமையாளர் மற்றும் தோட்ட அதிகாரி ஆகியோரே தாக்குதல் நடத்தியுள்ளனர். தோட்ட நிறுவனங்கள் மற்றும் பொலிஸ்மா அதிபரை அழையுங்கள். இது பற்றி கலந்துரையாட வேண்டும்.” – என்றும் மனோ கணேசன் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தான் வழங்கிய உறுதிமொழியின் பிரகாரம் மேற்படி சம்பவங்கள் தொடர்பில் சபையில் விளக்கமளித்தார்.

இதன்போது அவர் கூறியவை வருமாறு:–

“நீலகாமம் தோட்டத்தில் நடந்த சம்பவம் தொடர்பில் 11 பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அடுத்த கட்ட வழக்கு விசாரணை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி இடம்பெறும். பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மொக்கா தோட்டத்தில் நேற்றிரவு தோட்ட முகாமையாளரால், சிவகுமார் என்பவர் தாக்கப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்தியவர் கைது செய்யப்பட்டுள்ளார். இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்.

நேற்றிரவு உடபுஸல்லாவை, டெல்மா பகுதியில் தோட்டத் தொழிலாளி ஒருவர் தாக்கப்பட்டுள்ளார். தாக்கப்பட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

தாக்குதல்களை நாம் அனுமதிக்கவில்லை. சட்டம் அனைவருக்கும் சமம்.” – என்றார்.

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றனர்.

இன்று இரண்டாவது முறையாகவும் ஆளுநரைச் சந்தித்த விஜய், ஆட்சி அமைப்பதற்கான உரிமை கோரலை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இந்தநிலையில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

“மக்கள் த.வெ.கவைத் தனிப்பெரும் கட்சியாகத் தெரிவு செய்துள்ளனர். எனவே, குழப்பங்களுக்கு இடமளிக்காமல் விஜயைப் பதவியேற்க ஆளுநர் அனுமதிக்க வேண்டும். இதுவே முறையானது” – என்றார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு. வீர.பாண்டியன் விடுத்துள்ள அறிக்கையில்,

“பதவியேற்புக்கு முன்னரே பெரும்பான்மையை நிரூபிக்குமாறு ஆளுநர் வற்புறுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதது.

அரசமைப்புச் சட்டத்தை மதித்து ஆளுநர் செயற்பட வேண்டும். விஜய் தனது பெரும்பான்மையைச் சட்டசபையிலேயே நிரூபிப்பதற்கு ஆளுநர் போதிய அவகாசம் வழங்க வேண்டும்.” – என்று வலியுறுத்தியுள்ளார்.

மேலும், ஆளுநரின் நடவடிக்கையை விமர்சித்துள்ள நடிகர் பிரகாஷ் ராஜ் தனது “எக்ஸ்” தளத்தில்,

“ஆளுநரின் இந்தச் செயற்பாடு அரசமைப்புக்கு முரணானது. எமக்குள்ளே அரசியல் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம், ஆனால் விஜய்க்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது. சட்டசபையில் தனது பலத்தை நிரூபிக்க அவருக்கு உரிய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.” – என்று பதிவிட்டுள்ளார்.

தமிழகத்தில் ஆட்சி அமைப்பதில் ஏற்பட்டுள்ள இந்த இழுபறி நிலை காரணமாக அரசியல் களம் சூடுபிடித்துள்ளதோடு, ஆளுநரின் அடுத்தகட்ட நகர்வு குறித்து அனைவரும் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.





# கபில சந்திரசேனவை உடனடியாக கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு!

பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேனவைக் கைது செய்து நீதிமன்றத்தில்முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு விடுத்த கோரிக்கையைப் பரிசீலித்த பின்னர், கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ்.போதரகம இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

முன்னதாக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு எயார்பஸ் விமானங்களைக் கொள்வனவு செய்தபோது, இலஞ்சம் பெற்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அதன் முன்னாள் நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவின் பிணையை இரத்துச் செய்யுமாறு இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது.

கபில சந்திரசேனவின் பிணையை இரத்துச் செய்து, வழக்கு விசாரணை முடியும் வரை அவரை மீளவும் விளக்கமறியலில் வைக்குமாறு ஆணைக்குழு கோரியிருந்தது.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு எயார்பஸ் விமானங்களைக் கொள்வனவு செய்யும் கொடுக்கல் வாங்கலில், சுமார் 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலஞ்சமாகப் பெற்றார் என்று இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னதாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கபில சந்திரசேனவுக்குக் கடந்த சில நாள்களுக்கு முன்னரே பிணை வழங்கப்பட்டிருந்தது.

கபில சந்திரசேன தனக்கு வழங்கப்பட்ட பிணை நிபந்தனைகளை மீறியுள்ளார் என்றும், இதன் மூலம் நீதிமன்றத்தின் நம்பிக்கையை அவர் சீர்குலைத்துள்ளார் என்றும் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு சுட்டிக்காட்டியிருந்தது.

எனவே, அவரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான பிடியாணை ஒன்றையும் பிறப்பிக்குமாறு ஆணைக் குழு நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தோட்ட மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், இ.தொ.காவின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் நாடாளுமன்றத்தில் இன்று கருத்துகளை முன்வைத்தனர்.

ஜீவன் தொண்டமான் எம்.பி. கருத்து வெளியிடுகையில்,

"தோட்டப் பகுதிகளில் தாக்குதல்களை நடத்துபவர்கள் கைது செய்யப்படுகின்றனர், பிணை வழங்கப்படுகின்றது என்பது எங்களுக்கும் தெரியும். நிரந்தர தீர்வையே நாம் வலியுறுத்துகின்றோம்." – என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால,

"உங்களது ஆட்சிகாலத்தில்போல் விசாரணைகள் தாமதிக்கப்படுவதில்லை. நேற்றுமுன்தினமும், நேற்றும் இரண்டு சம்பவங்கள் நடந்துள்ளன. சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விசாரணைகளின் பின்னர் நீதிமன்ற உத்தரவுக்கமைய நாம் செயல்படுவோம்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பில் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். இனி இப்படியான சம்பவங்கள் நடப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

இது தொடர்பில் பொலிஸாருடன் கலந்துரையாடுவதற்கு உங்களுக்கு (மலையகப் பிரதிநிதிகள்) சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு நாம் தயார். நாடாளுமன்றத்திலோ அல்லது அதற்கு வெளியிலோ அல்லது நுவரெலியாவிலோ சந்திப்பை நடத்துவோம்.

எமது பிரதிநிதிகளும் உள்ளனர். அவர்களும் எமது கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர். நாம் உரிய தலையீடுகளை மேற்கொண்டுவருகின்றோம். – என்றார்.

இதனையடுத்து கருத்து வெளியிட்ட மனோ கணேசன் எம்.பி.,

"பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதானிகளை அழையுங்கள், நீங்களும் (அமைச்சர்) வாருங்கள், பொலிஸ்மா அதிபரும் வரட்டும். நாம் பேச்சு நடத்துவோம். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்." – என்றார்.

"உங்களது யோசனை தொடர்பில் பிரச்சினை இல்லை. அதற்கான வாய்ப்பு வழங்கப்படும். மலையக மக்கள் தொடர்பில் எமக்குப் பொறுப்பு உள்ளது." – என்று அமைச்சர் பதிலளித்தார்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## குளறுபடி!

பல்வேறு ஊழல், மோசடி, முறைகேடுகள், நிர்வாகச் சீர்கேடுகள் பற்றிய குற்றச்சாட்டுகள் எல்லாம் அடுத்தடுத்து ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும் நிதி அமைச்சின் கீழ் வந்து கொண்டிருப்பது இத்தகைய முறைகேடுகளுக்கு எதிரான நேர்மையான அரசியல்வாதி தாம் என்ற ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்ககவின் சுயதம்பட்டத்திற்கு பெரும் பாதிப்பாக வந்த அமைந்துள்ளது என்பது கண்கூடு.

நிதி அமைச்சுப் போன்ற சுயாதீனமான கட்டமைப்புகளை அரசியல் மயப்படுத்தப்பட்ட நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தமைதான் இந்தப் பிரச்சினைக்கு பிரதான காரணம் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

நிதி அமைச்சு போன்ற முக்கிய அரசு நிர்வாகங்கள் அல்லது கட்டமைப்புக்கள் அரசியல்மயப்படுத்தப் படக்கூடாது என்பதுதான் ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியின் முன்னைய நிலைப்பாடாகும்.

அரச நிர்வாகத்தை முன்னைய அரசுகள் அரசியல்மயப்படுத்தின என அந்தச் சமயத்தில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அநுரகுமார திஸநாயக்க குற்றம் காட்டி வந்தார். இது விடயத்தில் குறிப்பாக ராஜபக்ஷ நிர்வாகத்தை அவர் வன்மையாக விமர்சித்து வந்தார்.

2021 இல் ராஜபக்ஷக்களின் அரசாங்கத்தில் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அஜித் நிவார்ட் கப்ரால் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்ட போது அதனை எதிர்க்கட்சியில் இருந்த அநுரகுமார திஸநாயக்க வன்மையாகக் கண்டித்தார்.

அதே வேலையைத்தான் பின்னர் அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதியானதும் செய்தார். கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினராகவும் பிரதி நிதி அமைச்சராகவும் இருந்த கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவை நிதி அமைச்சை நிர்வகிக்கும் செயலாளர் பதவிக்கும் திறைசேரி செயலாளர் பதவிக்கும் நியமித்ததன் மூலம் நிதி அமைச்சை அரசியல் மயப்படுத்தினார் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க. அதன் விளைவுகளைத்தான் இப்போது பெரும் முறைகேடுகள், சிக்கல்களாக இந்தஅரசுஎதிர்கொண்டிருக்கின்றது என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

அரசுத் தரப்பு எம்.பியாக இருந்த வரை மத்திய வங்கி ஆளுநராகவும், அதே போன்று இப்போது திறைசேரி செயலாளராகவும் நியமித்தமை முக்கியப் பொருளாதார நிறுவனங்களின் அரசியல்மயமாக்கலையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

பொருளாதார ஆளுகை நிறுவனங்களில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது எனத் தான் எதிர்க் கட்சியாக இருந்தபோது எடுத் திருந்த நிலைப்பாடுகளை தற் போதைய அரசாங்கம் இப்போது அதிகாரத்துக்கு வந்ததும் கைவிட்டு விட்டது என்பதுதான் உண்மை.

பொது நிதி, கடன் மேலாண்மை மற்றும் அரச நிர்வாகத்தில் விரிவான அனுபவம் கொண்ட சிரேஷ்ட இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளால் பாரம்பரியமாக திறைசேரி செயலாளர் பதவி வகிக்கப்பட்டு வந்தது. அதை அரசியல் நியமனம் மூலம் குளறுபடி பண்ணிவிட்டது தேசிய மக்கள் சக்தி...!



# பாலம் செப்பனிடப்படாமையால் நுவரெலியாவில் மக்கள் அவதி!

(மஸ்கெலியா நிருபர்)

நுவரெலியா மக்கள் பஸ் நிலையத்துக்குச் செல்லும் முக்கிய பாலம், டித்வா புயலால் கடுமையாக சேதமடைந்து இன்றுவரை புனரமைக்கப்படாமல் உள்ளது. இது பொது மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அனர்த்தம் இடம்பெற்று ஆறு மாதங்களுக்கு மேலாகியும், நிரந்தர தீர்வு எதுவும் வழங்கப்படாமல் தற்காலிக மாற்றுப் பாதை ஒன்றை மட்டும் அமைத்து அதிகாரிகள் தங்கள் பொறுப்பை மறந்துவிட்டனர் என்று மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் பயன்படுத்தும் இந்தப் பாதை தற்போது மிகவும் ஆபத்தான நிலையில் காணப்படுகிறது. இதனால் பொது மக்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் வியாபாரிகள் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நுவரெலியா மாநகரசபை நகர அபிவிருத்தி குறித்து பெரிய பெரிய திட்டங்களைப் பேசுகிறது. ஆனால் மக்களின் அத்தியாவசிய தேவையான ஒரு பாலத்தையே ஆறு மாதங்களாக சீரமைக்க முடியாது உள்ளது.

சுற்றுலா நகரமாக விளங்கும் நுவரெலியாவின் அடிப்படை கட்டமைப்புகள் கூட பராமரிக்கப்படாத நிலையில் இருப்பது, மாநகர சபையின் செயலற்ற தன்மையை வெளிப்படுத்துகிறது என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நகரின் அழகுபடுத்தலுக்காக செலவிடப்படும் நிலையில், மக்கள் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து வசதிகள் புறக்கணிக்கப்படுவது குறித்து கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்த நிலையில், உடனடியாக பாலத்தை புனரமைத்து பாதுகாப்பான போக்குவரத்தை உறுதிசெய்ய நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நுவரெலியா மாவட்ட அரச அதிபர், நுவரெலியா மாநகர சபை முதல்வர், ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர்.

# வேலோடுமலையில் 7 ஆவது நாளாக 210 நாள் 210 சித்தர்கள் மகா யாகம்!





(வி.ரி. சகாதேவராஜா)

உலக அமைதி மக்களின் நன்மைக்காக, பூலோக சித்தர்களின் வருகையை முன்னிட்டு மட்டக்களப்பு சித்தாண்டி இலுக்குப்பொத்தானை வேலோடுமலையில் ஏழாவது நாளாக சர்வ வல்லமை வாய்ந்த 210 நாள்கள் 210 சித்தர்கள் மகா யாகம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கடந்த முதலாம் திகதி சித்ரா பௌர்ணமி தினத்தில் தொடங்கி 210 நாள்கள் தொடர்ச்சியாக காலையும் மாலையும் நடைபெற்று வரும் சர்வ வல்லமை வாய்ந்த 210 சித்தர்கள் வேள்வியை, சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜீ தலைமை தாங்கி நடத்தி வருகிறார்.

சித்தர்களின் ஆதி இருப்பிடமுமான போகர் பெருமான் சிகண்டி முனிவர் ரூபத்தில் இன்றும் சித்தர்களோடு வாழும் இலங்கையில் சித்தாண்டி வேலோடும் மலையில் காகபுஜண்டர் அருளாணைப்படி இந்த உலகை ஆளுகின்ற 210 சித்தர்களின் அருளாசியை வேண்டி, உலக மக்களின் நன்மைக்காக

இந்த மகா யாகம் நடைபெற்று வருகிறது.

நூறு கோடி சிவ பஞ்சாட்சர ஜெபத்துடன் நவம்பர் 26 ஆம் திகதிவரை தொடர்ந்து 210 நாட்கள் காலையும் மாலையும் இதுவரை உலகில் எங்குமே நடந்திராத அளவுக்கு அபூர்வ சஞ்சீவினி மூலிகைகளை கொண்டு அதி சக்தி வாய்த்த சித்தர்கள் வேள்வி நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சித்தர்களுக்காக குருபூஜை செய்து அந்தந்த சித்தர்களைப் பூஜித்து அவர்களுக்குரிய வழிபாட்டை செய்து வேள்வி நடைபெற்று வருகிறது.





# அக்கரைப்பற்றில் தொழில் கண்காட்சி

(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் வழிகாட்டலின் கீழ் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) செயற்பட்டுவரும் வழிகாட்டல் ஆலோசனை பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட தொழில் கண்காட்சி பாடசாலைக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

அதிபர் ஏ.எல்.நசீபா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் எம்.ஏ.தாஹிர், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுச் செயலாளர் சபூர் ஆதம், பிரதி அதிபர்களான எம்.ஏ.சலாகுதீன், ஏ.சி.எம்.ஹரிஸ், தொழிற்கல்வி இணைப்பாடவிதான இணைப்பாளர் எம்.ஏ.ஜி.பிர்னாஸ், மாணவர் வழிகாட்டல் ஆலோசனை பொறுப்பாசிரியர் ஏ.எம்.எம்.றஜிசாத், அக்கரைப்பற்று தொழில்நுட்ப கல்லூரி தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் எம்.எஸ் பிஸ்றின் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதன்போது 15 இற்கும் மேற்பட்ட அரச மற்றும் அரச சார்பற்ற கல்வித் துறை நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கு கொண்டு மாணவர் சமூகத்தின் எதிர்கால கல்வி நடவடிக்கைகள் தொடர்பில் போதிய ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை வழங்கினர்.

இதேவேளை, இந்த நிகழ்வின்போது பல்துறை தொழில் வழங்குநர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கான தொழிற்கல்வி, தொழிற் பயிற்சி, தொழில் சந்தை மற்றும் எதிர்கால சவால்மிகு தொழில் உலகுக்கு ஏற்ற வகையில் தொழில் துறைக்குள் நுழைவதற்கான நுட்ப மிகு வழிகாட்டல்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் மாணவர்களுக்கு விளக்கமளித்தனர்.

இந்த நிகழ்வின்போது பாடசாலையில் கல்வி பயிலும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு தத்தமது திறன்களையும், ஆற்றல்களையும் வளர்த்துக் கொள்வது எவ்வாறு என்பது தொடர்பிலும், பாடசாலைக் கல்வி நிறைவடைந்த பின்னர் தொடர்ந்து தொழில் உலகுக்கு ஏற்ற வகையில் தம்மை தயார் படுத்துவற்கான வழிப்படுத்தல்களை மேற்கொள்ளும் விதம் தொடர்பிலும் போதிய விளக்கங்கள் வழங்கப்பட்டன.





# சாய்ந்தமருது பிரதான வீதியில் உள்ள வடிகானில் முதலை!

(பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது பிரதான வீதியில் உள்ள வடிகானில் முதலை ஒன்று திசை மாறி வந்து நின்றுள்ளது.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பிரதான வீதியில் உள்ள வடிகானில் இன்று காலை சுமார் 9 அடி நீளமும் மிகவும் பருமனுமான முதலை ஒன்று சிக்கியுள்ளதை அவதானித்தவர்கள் சாய்ந்தமருது பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

குறித்த முதலையை உரிய முறையில் அகற்றுவதற்காக பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.







# கற்பிட்டி பிரதேச செயலகத்தில் புத்தாண்டு விளையாட்டு விழா!

**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

கற்பிட்டி பிரதேச செயலக வளாகத்தில் தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு பிரதேச செயலாளர் பீ.ஜீ.எஸ். என் பிரியதர்ஷினி தலைமையில் புத்தாண்டு விழா நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக கிராம உத்தியோகத்தர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர், பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

உத்தியோகத்தர்களுக்கு இடையிலான நல்லுறவையும் கூட்டுப் பணியையும் மேம்படுத்தும் நோக்கோடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விளையாட்டு விழா நிகழ்வில் பல்வேறு பாரம்பரிய விளையாட்டுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நிரந்தர அரச சேவையில் இணைக்குக!

## அரச பொது ஊழியர் சங்கம் வலியுறுத்தல்

**(ஜலீல் ஜீ)**

திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நிரந்தர அரச சேவைக்குள் உடனடியாக இணைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

உலக தொழிலாளர் தினத்தை முன்னிட்டு, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பிரதமர் மற்றும் நீதி அமைச்சருக்கு விடுக்கப்பட்ட விசேட வேண்டுகோளில், சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திடீர் மரண விசாரணை அதிகாரிகள் சமூக நீதி நிலை நாட்டும் முக்கிய பொறுப்பை வகிப்பவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. திடீர் மரணங்கள்




தொடர்பான உண்மைகளை கண்டறிந்து நீதியை உறுதிப்படுத்தும் இவர்களின் பணி மிகவும் உயர்ந்ததும் பொறுப்பு மிக்கதுமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நீதிமன்றங்களின் பணிச் சுமையை குறைத்து, நீதி நிர்வாகம் சீராக நடைபெறுவதற்கும் இவர்களின் பங்களிப்பு முக்கியமானதாக அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உயர்ந்த கல்வித் தகுதி, ஒழுக்கம் மற்றும் சமூக நன்மதிப்பின் அடிப்படையில் நீதி அமைச்சால் நியமிக்கப்படும் இவ்வதிகாரிகள், இரவு பகலின்றி பொதுமக்களுக்கு சேவையாற்றி வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், இவர்களுக்கு வழங்கப்படுவது குறைந்தளவிலான கொடுப்பனவுகள் மட்டுமே. வாழ்வாதார நிலைமைகள் மிகவும் சிரமமானதாக உள்ளது.

கிராம சேவையாளர் பதவி நிரந்தர அரச சேவைக்குள் இணைக்கப்பட்டதைப் போலவே, திடீர் மரண விசாரணை அதிகாரி பதவியும் நிரந்தர அரச சேவைக்குள் உள்வாங்கப்பட வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# மத்தியஸ்தம் சிறக்கப் பணியாற்றிய நால்வருக்கு அம்பாறையில் கௌரவம்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் மத்தி ஸ்தம் சிறக்க அரும்பணி ஆற்றிய நால்வர் நேற்று புதன்கிழமை நிந்தவூரில் கௌரவிக்கப்பட்டனர்.

நிந்தவூர் மத்தியஸ்த சபையின் தவிசாளர் ஏ. ஏ. ஹமீட் தலைமையில் நடைபெற்ற இந்த கௌரவிப்பு நிகழ் வின் போது அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். ஜெகராஜன், நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ. எம்.அப்துல் லத்தீப், அம்பாறை மட்டக் களப்பு மாவட்டங்களுக்கான மத்தியஸ்த பயிற்றுவிப்பாளர் எம். ஐ. எம். ஆஸாத், நிந்தவூர் மத்தியஸ்த சபையின் முன் னாள் தவிசாளரும் இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண் மத்தியஸ் தருமான திருமதி பீ.ஏ.மஜீட் ஆகியோர் களின் சேவைகளை பாராட்டியே இந்த கௌரவம் வழங்கப்பட்டது.

இவர்கள் நால்வரும் மத்தியஸ்தத் துக்காக ஆற்றிய சேவையை மதித்து பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்ட னர்.





# மாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்





(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரிவுகளும் அபிவிருத்தி திட்டங்களும் தொடர்பான 2026 ஆம் ஆண்டுக்கான கொள்முதல் திட்டம் பற்றிய மறுபரி சீலனை கூட்டம் நேற்று கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் திருகோணமலை மாகாண கல்வி அமைச்சின் மண்ட பத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சும் அத னுடன் இணைக்கப்பட்டுள்ள மாகாண விளையாட்டு துறை, கலாச்சார துறை மற்றும் மாகாண முன்பள்ளி அலுவல கம் ஆகிய நிறுவனங்களின் முன் னேற்றம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இதில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள மாகாண பணிப்பாளர் விளையாட்டு துறை பணிப் பாளர், மாகாண கலாச்சார துறை பணிப் பாளர் மற்றும் வலய கல்வி பணிப் பாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# சட்டவிரோத சுருக்குவலைகளைப் பாவிக்கும் மீனவருக்கு எதிராக நடவடிக்கை தேவை!

**ஈ.பி.டி.பி. மட்டு. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அந்தனிசில் ராஜ்குமார் கோரிக்கை**

(கனகராஜா சரவணன்)



மட்டக்களப்பு பூநொச்சிமுனை தொடக்கம் பெரிய நீலாவணை வரையும் சட்டவிரோத 47 சுருக்குவலை, மற்றும் டைனமட் பாவித்து மீன் பிடித்து கடல் வளத்தை அழித்து வருபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து கடல் வளத்தை பாதுகாக்க மீன்பிடி அமைச்சர் சந்திரசேகரம் முன்வரவேண்டும் என்று ஈ.பி.டி.பியின் மட்டு. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அந்தனிசில் ராஜ்குமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டு பாலமீன்மடுவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை மாலை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடலை நம்பி மீன் பிடியில் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட மீனவர்கள் வாழ்வாதாரத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் சட்டவிரோதமான செயற்பாடுகளாக டைனமட் அடித்து மீன் பிடிப்பதுடன் தடை செய்யப்பட்ட சுருக்கு வலை பாவித்தும் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே அதை நிறுத்துவதற்கு கடற்றொழில் நீரியல் வள உதவிப் பணிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். மட்டக்களப்பு - நாவற்குடா - பூநொச்சிமுனை தொடக்கம் பெரியநீலாவணை வரையும் 47 பேர் சட்டவிரோத சுருக்குவலை பாவித்து மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சுருக்கு வலையைப் பாவித்து மீன்பிடியில் ஈடுபட்டு வருபவர்களுக்கு எதிராக மாவட்டக் கடற்றொழில் நீரியல் வள உதவி பணிப்பாளர், விசேட அதிரடிப்படை, கடற்படையுடன் இணைந்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதன் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தின் மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு உதவுவதுடன் இந்த கடல் வளத்தையும் பாதுகாக்க முடியும்.

இந்த மாவட்டத்தில் சட்டவிரோத சுருக்குவலை பாவித்து மீன் பிடிப்பதால் கீரி மீன்பிடி வலையை வைத்து மீன் பிடியில் ஈடுபட்டுவரும் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இந்தக் கீரி மீன் பிடிக்கும் தொழிலில் சட்டவிரோதமான சுருக்கு வலைகளை பாவித்து பூநொச்சிமுனை, காத்தான்குடி, செட்டிபாளையம், தேற்றாதீவு, மாங்காடு, களுதாவளை, களுவாஞ்சிக்குடி ,கல்லாறு பெரியநீலாவணைவரை இந்த மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் இரவில் சுருக்கு வலையால் ஒருவர் ஆயிரம் கிலோ கிராம் வீதம் மீன்களை பிடித்து வந்து அதனை மிகவும் குறைந்த விலையில் கிலோ 300 ரூபாவுக்கு விற்று வருகின்றனர்.

இருந்த போதும் இங்கு பல ஆண்டுகளாக இந்த கீரி வலையை நம்பி தொழில் செய்து வருகின்ற மீனவர்களுக்கு ஒரு கிலோ அல்லது இரண்டு கிலோ மீன் மட்டும் பிடிபடுகிறது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். மாவட்டத்தில் சட்டவிரோத சுருக்கு வலை பாவித்து மீன் பிடிப்பதை நிறுத்தாவிட்டால் எதிர்காலத்தில் மீன்கள் இல்லாமல் போகும் நிலை ஏற்படும்.

எனவே ஏனைய மீனவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு சட்டவிரோதமாக சுருக்குவலை பாவித்து மீன் பிடிப்பவர்கள் அதனை கைவிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.– என்றார்

# ‘மருத்துவ தடயவியல்’ என்னும் நூல் வெளியீடு கொழும்பில்



ஆஸ்திரேலியாவின் முதுநிலை ஆலோசகர், தடயவியல் நோயியல் நிபுணர், இலங்கையின் நீதித்துறை ஆலோசகர் மருத்துவ அதிகாரி, டாக்டர் காசிநாதன் நடேசன் எழுதிய “மருத்துவ தடயவியல்” என்னும் நூல் கொழும்பில் வெளியிடப்படவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி மாலை 4 மணிக்கு கொழும்பு 03 ரேணுகா ஹோட்டலில் இடம்பெறவுள்ள

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ். துரைராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நூல், 1994 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஒரு மருத்துவ மாணவரின் சர்ச்சைக்குரிய மரணம் குறித்த மறு ஆய்வாகும். ஆரம்பத்தில் தற்கொலை என கருதப்பட்டு, பின்னர் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய ஒரு கொலை விசாரணையாக மாறிய வழக்கு இது. இந்த வழக்கின் உண்மையான தடயவியல் பரிசோதகரான டாக்டர் நடேசன், பல தசாப்தங்களாக விரிவடைந்த சாட்சியங்கள், புலனாய்வுத் தவறுகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்த ஒரு துல்லியமான விவரிப்பை இதில் முன்வைக்கிறார்.

28 ஆண்டுகளுக்குப் பிறகு, குறைபாடுள்ள விசாரணைகள் மற்றும் நீதியற்ற தீர்ப்புகளின் அபாயங்களைச் சுட்டிக்காட்டி, உயர்நீதிமன்றம் இந்த வழக்கின் தண்டனைகளை இரத்து செய்தது.

இந்த வலிமையான விவரிப்பு மருத்துவம், சட்டம் மற்றும் புலனாய்வுத் துறை சார்ந்த நிபுணர்களுக்கும், உண்மை, நீதி மற்றும் தடயவியல் நடைமுறையின் நேர்மை ஆகியவற்றில் அக்கறை கொண்ட எவருக்கும் ஒரு முக்கியமான ஆய்வாகும்.

# வடக்கு, கிழக்கில் புழுதி விதைப்பு செய்கையாளர் இலவச காப்பீட்டை பெறுவதில் நெருக்கடி நிலை!

## அமைச்சர் லால்காந்தவிடம் ரவிகரன் எம்.பி. எடுத்துரைப்பு

(விஜயரத்தினம் சரவணன் )

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புழுதி விதைப்பு முறையைப் பின்பற்றும் நெற்செய்கையாளர்கள், தமது நெற்செய்கை அழிவுறுகின்ற சந்தர்ப்பங்களில், கமத்தொழில் காப்புறுதிச் சபையால் வழங்கப்படுகின்ற இலவசக் காப்பீட்டைப் பெறுவதில் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.



குறிப்பாக கமத்தொழில் காப்புறுதிச் சபையின் சுற்றறிக்கையில் புழுதி விதைப்பு முறைக்கு காப்பீட்டு ஏற்பாடுகள் இன்மையே நெற்செய்கையாளர்கள் இவ்வாறு நெருக்கடிகளுக்கு உள்ளாகுவதற்கு காரணம் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே புழுதி விதைப்பு முறையில் நெற் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கும் காப்பீடுகளை வழங்குவதற்கு ஏற்றவாறு கமத்தொழில் காப்புறுதிச் சபையின் சுற்றறிக்கையில் மாற்றங்களைக் கொண்டுவருமாறு விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்தவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில்நேற்று இடம்பெற்ற மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டு விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்குப்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பொருளாதார அடிப்படையில் இடர் நிலைகளை எதிர்கொள்ளும் நிறுவனங்களையும் தனியாள்களையும் மீட்டெடுத்து, மறுசீரமைத்து மீண்டும் அவை செயற்படுவதற்கான சட்ட ஏற்பாட்டை நிறுவுதல் வரவேற்கத்தக்கது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்கள் வீழ்ச்சி அடையும் போது அவற்றை மீண்டும் எழுச்சி பெறச் செய்வது வேலை வாய்ப்புகளையும் பொருளாதார உறுதிப்பாட்டையும் பாதுகாக்க உதவும்.

இவ்வாறான சட்டமூலம் நடைமுறைப்படுத்தப்படும் போது பெரும் நிறுவனங்கள் இந்தச் சட்ட நடைமுறைகளை அணுகுவதற்கு உள்ள வழிநிலைகளைப் போன்று சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களும் தனியாள்களும் இந்தச் சட்ட நடைமுறைகளை அணுகக்கூடிய இயல் நிலையையும் உறுதிப்படுத்த வேண்டும்.

சட்டத்தின் ஊடான நன்மைகளைப் பெறுவதிலும் பிராந்திய அடிப்படையிலான சமத்துவ நிலையில் வன்னிப் பிராந்தியம் உரியவாறு விழிப்பூட்டப்படவேண்டும்.

ஏனெனில் ஓர் அரசாக தங்களின் சுற்றறிக்கைகளில் பிராந்திய அடிப்படையிலான நலன்கள் கருத்தில் கொள்ளப்படுவதில்லையோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

அதற்கு ஓர் எடுத்துக்காட்டுதான் கமநல காப்புறுதிச் சபையின் சுற்றறிக்கையில் வடகிழக்கில் பெரும்பாலும் மேற்கொள்ளப்படும் புழுதி விதைப்பின் புறக்கணிப்பு.

வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள பெருமளவான நெற்பயிர்ச்செய்கையாளர்கள் பெரும்போக நெற் பயிர்ச் செய்கைக் காலத்தில் புழுதி விதைப்பு முறையில் உலர் நிலத்தில் நெல் விதைப்பை மேற்கொள்கின்றனர்.

இவ்வாறு புழுதி விதைப்பு முறையில் உலர் நிலத்தில் நெல் விதைப்பை மேற்கொள்ளும் விவசாயிகள் தமது நெற்பயிர்கள் அனர்த்தம் காரணமாக அழிவடையும் நிலை நேரிடும் போது அவ்வழிவுக்கான காப்பீட்டை பெற்றுக் கொள்ள இயலாது அவதியுறுகின்றனர்.

குறிப்பாக மழையை நம்பி புழுதி விதைப்பு முறையில் உலர் நிலத்தில் நெல் விதைப்பை மேற்கொள்ளும் விவசாயிகளின் அறுவடைக்காலம் பிந்துவதாலேயே இந்த நிலை ஏற்படுகின்றது.

கமத்தொழில் காப்புறுதிச்சபையின் சுற்றறிக்கையில் புழுதி விதைப்பு முறைக்கான காப்பீட்டுக்குரிய ஏற்பாடுகள் இல்லை எனச் சொல்லப்படுகிறது.

இதனால் வடக்கு கிழக்கில் புழுதி விதைப்பு முறையினைப் பின்பற்றும் நெற் பயிர்ச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிப்புகளை எதிர்நோக்குகின்றனர்.

எனவே புழுதி விதைப்பு முறையில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்கின்ற விவசாயிகளுக்கும் காப்பீடுகளை வழங்குவதற்கு ஏற்றவாறு கமத்தொழில் காப்புறுதிச் சபையின் சுற்றறிக்கையில் மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும்.– என்றார்.

# நாடகப் பயிலகம் புதிய பிரிவு ஆரம்பம்

நாடகக் கலையின் மேம்பாடு கருதி செயல்முறை சார்ந்த தேர்ச்சியை மேம்படுத்தும் நோக்கோடு திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்தால் கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகின்ற நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கைநெறியின் 2026 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவு எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது மணிமண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும், நாடகமும் அரங்கியலும் பாடத்தின் தரம்11,12,13 களில் பயிலும் ஆர்வமுள்ள மாணவர்களும் இணைந்து கொள்ள முடியும்.

ஆறுமாதங்களைக் கொண்ட இப் பயிற்சிநெறிக்கான வகுப்புக்கள் சனி ,ஞாயிறு தினங்களில் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 5.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் நாடக எழுத்துருவாக்கம், நடிப்பு, நெறியாள்கை, அரங்கத்துணைக் கலைகள் ( வேட உடை, ஒப்பனை, காட்சி விதானிப்பு, இசை, ஒளி விதானிப்பு), நாடகத் தயாரிப்பு, கூத்துப் பயிற்சிகள் போன்றவை பிரதான அம்சங்களாக அமையும்.

இப்பயிற்சிநெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக் கிழமைக்கு முன்பாக ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# 113 பேருடன் எப்படி ஆட்சி அமைப்பீர்கள்? ஆளுநரின் கேள்விகளுக்கு விஜய் விளக்கம்!

த.வெ.க தலைவர் விஜய் ஆளுநரை நேற்று புதன்கிழமை சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரிய நிலையில், வியாழக்கிழமை மீண்டும் ஆளுநரை சந்தித்து தனிப்பெரும் கட்சியான தங்களை ஆட்சியமைக்க அழைப்பு விடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.எல். அல்கேகருடனான இன்றைய சந்திப்பின் போது, த.வெ.க. தலைவர் விஜய்யிடம் பல்வேறு கேள்விகளுக்கு விளக்கம் கோரப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழக சட்டப்பேரவையில் 108 இடங்களில் வெற்றி பெற்றுத் தனிப்பெரும் கட்சியாக த.வெ.க உருவெடுத்தாலும், ஆட்சி அமைக்கத் தேவையான 118 இடங்கள்என்னும்அறுதிப்பெரும்பான்மையைப் பெற முடியாத நிலையில் இருக்கிறது.

தி.மு.க கூட்டணியில் தேர்தலை சந்தித்த காங்கிரஸ் (5 உறுப்பினர்கள்) த.வெ.கவுக்கு ஆதரவளித்த நிலையில், இன்னும் 6 பேர் ஆதரவு தவெகவுக்கு தேவைப்படுகிறது. வி.சி.க, இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சிகளுடன் த.வெ.க பேச்சு நடத்தி வருகின்றது.

இதனிடையே, தனிப் பெரும் கட்சி என்ற அடிப்படையில் தமிழ்நாடு ஆளுநரை த.வெ.க தலைவர் விஜய் நேற்று



நேரில் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார். ஆனால், இன்று காலை வரை ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்கப்படாததால் மீண்டும் ஆளுநரை விஜய் சந்தித்துப் பேசினார்.

ஆளுநர் தரப்பில் பெரும்பான்மைக்கு தேவையான 118 பேர் பட்டியல் கோரப்பட்டதாகவும், ஆட்சி அமைத்த பிறகு பேரவையில் நிரூபிக்கிறோம் என்றும் த.வெ.க. தெரிவித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இரண்டாவது நாளாக இன்று காலை 11 மணியளவில் ஆளுநர் மாளிகைக்கு சென்ற விஜய் மீண்டும் ஆளுநரை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

அப்போது பெரும்பான்மைக்கு 118 உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்படும் நிலையில், 113 (காங்கிரஸ் சேர்த்து) உறுப்பினர்களை வைத்துக் கொண்டு எப்படி ஆட்சி அமைக்கப் போகிறீர்கள்? என்று ஆளுநர் கேள்வி எழுப்பியதாக கூறப்படுகிறது.

மேலும், விஜய் ஒரு தொகுதியில் இராஜினாமா செய்யும் பட்சத்தில், பெரும்பான்மையை எட்ட இன்னும் 6 எம்.எல்.ஏ.க்கள் தேவைப்படுகின்றனர், எந்தெந்த கட்சிகள் ஆதரவு அளிக்க தயாராக இருக்கின்றன? என்றும் ஆளுநர் விளக்கம் கேட்டார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆளுநர் எழுப்பிய கேள்விகளுக்கு விஜய்யும், த.வெ.க நிர்வாகிகளும் விளக்கம் அளித்தனர் எனவும் சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிப்போம் என்று உறுதி அளித்தனர் என்றும் கூறப்படுகிறது.

ஆளுநர் மாளிகைக்குள் சென்று சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு சந்திப்பை முடித்துக் கொண்டு விஜய் மற்றும் த.வெ.க நிர்வாகிகள் வெளியேறியுள்ளனர்.

விஜய் முதல்வராகப் பதவியேற்க இருந்த சிக்கல்கள் தீர்ந்தனவா? என்பது தெரியவில்லை. த.வெ.க. தரப்பில் அளிக்கப்பட்ட பதில்களில் ஆளுநருக்கு திருப்தி ஏற்பட்டிருந்தால், ஒரு சில மணி நேரங்களில் ஆட்சி அமைக்க அதிகாரப்பூர்வமாக அழைப்பு விடுப்பார்

# பனையூர் த.வெ.க. அலுவலகத்தில் எம்.எல்.ஏக்கள் அவசர ஆலோசனை



பனையூரில் உள்ள த.வெ.க அலுவலகத்துக்கு வருமாறு எம்.எல்.ஏ.க்களுக்கு கட்சியின் பொதுச் செயலாளர் என். ஆனந்த் இன்று அழைப்பு விடுத்திருந்தார்.

தமிழக சட்டப்பேரவையில் 108 இடங்களில் வெற்றி பெற்றுத் தனிப்பெரும் கட்சியாக த.வெ.க. உருவெடுத்தாலும், ஆட்சி அமைக்கத் தேவையான 118 இடங்கள் என்னும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியாத நிலையில் இருக்கிறது.

தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்ற காங்கிரஸின் 5 உறுப்பினர்களின் ஆதரவை நேற்று த.வெ.க. பெற்ற நிலையில், இன்னும் 6 பேரின் ஆதரவு தேவைப்படுகிறது. இடதுசாரிகள் (4), விடுதலைச் சிறுத்தைகள் (2) கட்சிகளிடம் த.வெ.க. ஆதரவு கோரியுள்ளது.

இதனிடையே, நேற்று மாலை ஆளுநர் ஆர்.வி.ஆர்.லேகரை நேரில் சந்தித்து த.வெ.க. தலைவர் விஜய் உரிமை கோரினார். ஆனால், இதுவரை ஆட்சி அமைக்க விஜய்யை ஆளுநர் அழைக்கவில்லை.

இதனால், சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் இன்று நடைபெறவிருந்த விஜய்யின் பதவியேற்பு விழா ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை செய்ய த.வெ.க. பொதுச் செயலாளர் என். ஆனந்த் தலைமையில் எம்.எல்.ஏ.க்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று காலை 11 மணியளவில் நடைபெற்றது.

மாமல்லபுரம் நட்சத்திர விடுதியில் தங்கவைக்கப்பட்டுள்ள எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் இந்த கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.




# த.வெ.கவின் ஆட்சி அமைய தி.மு.க இடையூறு செய்யாது

## மு.க. ஸ்டாலின் தெரிவிப்பு

தமிழகத்தில் விஜய் தலைமையிலான த.வெ.க. ஆட்சியமைக்க 6 மாதங்களுக்கு தி.மு.கவினால் எந்த இடையூறும் இருக்காது என தி.மு.க. தலைவரும் முன்னாள் முதல்வருமான மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தி.மு.க, விரைவான ஓர் அரசமைப்பு நெருக்கடியையோ மற்றொரு தேர்தலையோ விரும்பவில்லை. புதிதாக அமையவிருக்கும் அரசு, அவர்களின் வாக்குறுதிகளை நிறைவேற்றும் அதே வேளையில் தி.மு.க. அரசின் திட்டங்களையும் தொடர வேண்டும்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டமும் தொடரப்பட வேண்டும்.

இருப்பினும், பெண்களுக்கு 2,500 இந்திய ரூபா கொடுப்பதாக விஜய் அளித்திருக்கும் வாக்குறுதியைக் காப்பாற்றுவது கடினம். நாங்கள் செய்ததுபோல, குறைந்த பட்சம் 1,000 இந்திய ரூபா கொடுங்கள்.

2021 தேர்தலில் தி.மு.கவின் வாக்குறுதிகளில் 90 சதவிகிதம் நிறைவேற்றி விட்டோம். மத்திய அரசின் கட்டுப்பாடு காரணமாகவே, நீட் தேர்வு ரத்து போன்ற சிலவற்றைச் செய்ய முடியவில்லை.

இந்தத் தேர்தலிலும்கூட, எங்களால் நிறைவேற்றக்கூடியவற்றை மட்டுமே வாக்குறுதிகளாக அளித்தோம்.

ஆனால், "ரேஷன்" அட்டைதாரர்களுக்கு ஆண்டுக்கு 6 சிலிண்டர்களை த.வெ.க. வழங்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. அப்படி செய்தால், எங்களுக்கு மகிழ்ச்சிதான்." என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தேர்தலில் எந்தக் கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்காததால், கூட்டணி ஆட்சியமைப்பதில் த.வெ.க மும்முரம் காட்டி வருகிறது.

இதனிடையே, தி.மு.கவும் அ.தி.முகவும் ஒன்றிணைந்து ஆட்சியமைக்க விருப்பதாக சமூக ஊடகங்களில் செய்திகள் பரவின. இந்த நிலையில்தான், த.வெ.க ஆட்சிக்கு தி.மு.க எந்த இடையூறும் செய்யாது என மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

# விஜய்யை ஆட்சியமைக்க அழைக்காமல் இருப்பது தமிழகத்திற்கு அவமானம் என்கிறார் கமல் ஹாசன்

த.வெ.க. தலைவர் விஜய்யை ஆட்சியமைக்க ஆளுநர் அழைக்காமல் இருக்கின்றமை தமிழ்நாட்டு மக்களின் ஆணையை அவமதிப்பதாகும் என்று மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் கூறியுள்ளார்.

இதுபற்றி அவர் தனது எக்ஸ் பக்கத்தில்,

"தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தனித்து ஆட்சியமைக்கும் அதிகாரத்தை மக்கள் எந்தக் கட்சிக்கும் வழங்கவில்லை. இந்த முடிவு தமிழ்நாட்டு வரலாற்றில் முன்னெப்போதும் நிகழாதது.

என் சகோதரர் ஸ்டாலின், 'மக்கள் தீர்ப்பை மதிக்கிறோம் பொறுப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம்' என்று அறிவித்திருக்கிறார். அவரது அரசியல் முதிர்ச்சியை நான் மதிக்கிறேன். இப்போது அரசமைப்பு பொறுப்பில்




இருப்பவர்களும் அதே கடமையை நிறைவேற்ற வேண்டும். இது கோரிக்கை அல்ல, அவர்களின் அரசமைப்புக் கடமைக்கான நினைவூட்டல்.

விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வென்றுள்ளது. அவரை ஆட்சியமைக்க அழைக்காமல் இருப்பது தமிழ்நாட்டு மக்களின் ஆணையை அவமதிப்பதாகும்.

233 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இன்னும் பதவியேற்க முடியாமல் இருக்கிறார்கள். இது மாநிலத்திற்கு நேரும் அவமானம் மக்களாட்சிக்கு ஏற்படும் சேதம்.

'பெரும்பான்மையை சட்டமன்றத்தில்தான் நிரூபிக்க வேண்டும், ராஜ் பவனில் அல்ல' என எஸ்.ஆர். பொம்மை வழக்கில் உச்ச நீதிமன்றம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

நான் பேசிக்கொண்டிருப்பது கட்சி அரசியல் அல்ல. ஓர் இந்தியக் குடிமகனின் கொள்கைக் குரல் இது. தமிழ்நாட்டு மக்களின் தீர்ப்புக்கு மரியாதை கிடைத்தே ஆக வேண்டும்." என்று பதிவிட்டுள்ளார்.



# ஹார்முஸ் ஜலசந்தியை விரைவில் திறந்து விடுங்கள்

## ஈரானுக்கு சீனா கோரிக்கை

ஹார்முஸ் ஜலசந்தியை விரைவில் திறந்து விடுங்கள் என்று ஈரானிடம் சீனா கேட்டுக் கொண்டுள்ளது.

பெப்ரவரி 28 ஆம் திகதி ஈரானுக்கு எதிரான போர் நடவடிக்கையை அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய படைகள் தொடங்கின.

இதையடுத்து பதிலடி தாக்குதலை முன்னெடுத்த ஈரான், உலக பொருளாதாரத்தின் முக்கிய கடல் வழி பாதையான ஹார்முஸ் ஜலசந்தியை அதிரடியாக முடியது.

பல கட்ட பேச்சுக்களுக்கு பிறகு தாக்குதலை இரு தரப்பும் நிறுத்திக் கொண்டன. ஆனால் ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பது குறித்து எந்தவொரு முக்கிய முடிவும் எடுக்கப்படாமல் பேச்சு தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்நிலையில், அணு ஆயுதங்கள் தொடர்பான செயல்களை மேற்கொள்ள மாட்டோம் என்று சீனாவிடம் ஈரான் உறுதியளித்துள்ளது.

இந்த நடவடிக்கையை வரவேற்பதாக தெரிவித்த சீனா, ஹார்முஸ் ஜலசந்தியையும் உடனடியாக திறந்து விடுமாறு ஈரானிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

இது குறித்து சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி தெரிவித்த தகவலில், ஹார்முஸ் ஜலசந்தியில் பயணம் மேற்கொள்வது குறித்து சர்வதேச சமூகம் கவலையை பகிர்ந்து வருகிறது.

சர்வதேச சமூகத்தின் கோரிக்கைகளுக்கு ஈரான் கூடிய விரைவில் முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஹிஸ்புல்லாவின் உயர் தளபதியை இலக்குவைத்து இஸ்ரேல் தாக்குதல்!

லெபனானின் பெய்ரூட் நகரில் ஹிஸ்புல்லா அமைப்புடன் மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பிறகு, இஸ்ரேல் நேற்று முதல் முறையாக வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது.

பெய்ரூட்டின் தெற்குப் புறநகர்ப் பகுதியில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில், ஹிஸ்புல்லாவின் உயரடுக்கு ரத்வான் படையின் தளபதி இலக்கு வைக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலில் அந்தத் தளபதி கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ள போதிலும், இஸ்ரேலிய இராணுவமோ அல்லது ஹிஸ்புல்லாவோ அதனை உடனடியாக உறுதிப்படுத்தவில்லை.

இந்தத் தாக்குதல் அமெரிக்கா – ஈரான் சமரசத்தின் ஒரு பகுதியான போர் நிறுத்தத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.



லெபனானின் தென்பகுதியில் தாக்குதல்கள் தொடர்வதால், ஹிஸ்புல்லாவும் இஸ்ரேலை நோக்கி ஏவுகணை மற்றும் ஆளில்லா விமான தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்தநிலையில், ஜெலயா நகரில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே, லெபனான் பிரதமர் நவாப் சலாம் மற்றும் ஜனாதிபதி ஜோசப் அவுன் ஆகியோர், இஸ்ரேலுடன் உயர்மட்ட சந்திப்பு நடத்துவதற்கு இது சரியான தருணம் அல்ல எனக் கூறியுள்ளனர்.

மேலும், இஸ்ரேலிய படைகள் திரும்பப்பெறுவதற்கான கால அட்டவணையே தற்போதைய தேவை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த மார்ச் 2 ஆம் திகதி தொடங்கிய இந்த மோதலில் லெபனானில் 2,700 இற்கும் மேற்பட்டோரும், இஸ்ரேல் தரப்பில் 17 வீரர்களும் உயிரிழந்துள்ளனர்.

கனடா முரசு
பக்கங்கள் - 03
வியாழக்கிழமை 07/05/2026

## மார்கம் நெடுஞ்சாலை விபத்தில் இருவர் காயம்



C2▶

# AMNESTY INTERNATIONAL

# கனடாவில் இணையவழியில் அதிகரித்துவரும் இனவெறுப்பு

## சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை

கனடாவில் இணையவழி இனவெறுப்பு அதிகரித்து வருவதாக மனித உரிமைகள் அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

கனடாவில் பெண்கள், சிறுபான்மையினர் முதலானோருக்கு எதிரான இணையவழி வெறுப்புப் பேச்சின் அளவு அதிகரித்து வருவதை விவரிக்கும் ஒரு அறிக்கையை சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ளது.

கனடாவில் வெளிநாட்டினர் மீதான வெறுப்பு, பெண்கள் மீதான வெறுப்பு மற்றும் இன வெறுப்பு அதிகரித்துள்ளதை அந்த அறிக்கை விவரிக்கிறது.

உதாரணமாக, 2.5 மில்லியனுக்கும் அதிகமான பின்தொடர்பவர்களைக் கொண்டதும், தவறான தகவல்கள், இஸ்லாமிய வெறுப்பைப் பரப்பியதற்காக விமர்சிக்கப்பட்டதுமான 6ixBuzz என்ற இன்ஸ்டாகிராம் கணக்கு, ஆசிய எதிர்ப்பு, சீக்கிய எதிர்ப்பு மற்றும் இந்திய எதிர்ப்பு சார்புகளைப் பரப்பியதாகவும் கூறப்படுகிறது.

C2▶

# அல்பெர்ட்டா பிரிந்து செல்ல வேண்டுமா? 3 லட்சம் கையெழுத்துகளுடன் மனுத்தாக்கல்







கனடாவிலிருந்து அல்பெர்ட்டா மாகாணம் பிரிந்து செல்ல வேண்டுமா என்பது குறித்து பொதுமக்களிடம் கருத்துக்கேட்பு நடத்தக் கோரி, சுமார் 3 லட்சத்திற்கும் அதிகமான கையெழுத்துகள் அடங்கிய மனு தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

'ஸ்டே ஃப்ரீ அல்பெர்ட்டா' அமைப்பின் தலைவர் மிட்ச் சில்வெஸ்டர், எட்மண்டனில் உள்ள தேர்தல் ஆணைய அலுவலகத்தில் இந்த மனுவை அளித்தார்.

சட்டப்படி 1.78 லட்சம் கையெழுத்துகள் தேவைப்படும் நிலையில், தாங்கள் 3,00,000 இற்கும் அதிகமான கையெழுத்துகளைச் சேகரித்துள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஒருவேளை இந்த மனு அங்கீகரிக்கப்பட்டால், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் தேர்தல் வாக்குகளுடன் இந்தப் பிரிவினை குறித்த கேள்வியும் இடம்பெற வாய்ப்புள்ளது.

பழங்குடியின மக்களின் உரிமைகளை இது மீறுவதாகக் கூறி தொடரப்பட்ட வழக்கு ஒன்றின் தீர்ப்பு விரைவில் வரவுள்ளது.

C2▶



# மார்கம் பகுதியில் பல வாகனங்கள் மோதி இடம்பெற்ற பாரிய விபத்தில் இருவர் காயம்

மார்கம் பகுதியில் உள்ள 407 நெடுஞ்சாலையில் நேற்று புதன்கிழமை இரவு பல வாகனங்கள் மோதி ஏற்பட்ட விபத்தில் இருவர் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

ஒன்டாரியோ மாகாண பொலிஸின் தகவலின்படி, இந்த விபத்து மாலை சுமார் 6:15 மணியளவில் டீயலஎநைற யுஎநரெந அருகே கிழக்கு நோக்கிச் செல்லும் பாதையில் இடம்பெற்றுள்ளது.

யோர்க் அவசர மருத்துவப் பணியாளர்கள் தெரிவிக்கையில், ஒருவருக்கு கடுமையான காயங்களும் மற்றொருவருக்கு சிறிய காயங்களும் ஏற்பட்டுள்ளன.

இந்த விபத்தில் சரியாக எத்தனை வாகனங்கள் தொடர்புடையவை என்பது இன்னும் தெளிவாக தெரியவில்லை. விபத்திற்கான காரணம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது.

## கனடாவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த செய்திகள், கனடாவின் அரசாங்கக் கொள்கையையும், கனடாவில் பல தசாப்தங்களாக சமூகத் திட்டங்களுக்கு முறையாக நிதி ஒதுக்கப்படாததையும் சுட்டிக் காட்டுவதற்கு பதிலாக, அரசாங்கங்களின் பொருளாதாரத் தோல்விகள் மற்றும் உலகளாவிய நவீன தாராளவாத ஒழுங்கிற்கான பழியை, சிறுபான்மை சமூகங்கள் மீது சுமத்துகின்றன என்கிறது சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை.

இணையத்தளத்தில் நிகழும் வெறுப்புக் குற்றங்கள் கனேடிய அரசாங்கத்தால் பெருமளவில் ஒழுங்குபடுத்தப்படாமல் உள்ளன.

இந்நிலையில், முன்வைக்கப்பட்டுள்ள மசோதா சி 63, இணையவழி வெறுப்புப் பேச்சுக்குக் கடுமையான தண்டனைகளை அறிமுகப்படுத்துகிறது.

இந்த மசோதா சட்டமாக்கப்பட்டால், இணையவழி வெறுப்புப் பேச்சைக் கையாள்வதற்கான ஒரு கட்டமைப்பை நிர்வகிக்க, ஒரு டிஜிட்டல் பாதுகாப்பு ஆணையரையும் நியமிக்கும்.

என்றாலும், இந்த மசோதா மிகவும் பரந்ததாகவும், தெளிவற்றதாகவும் இருப்பதாக விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அது அரசியல் உள்நோக்கம் கொண்ட துன்புறுத்தல்களுக்கு வழிவகுக்கும் அபாயத்தை ஏற்படுத்தக்கூடும் என்ற கருத்தும் நிலவுகிறது.

கனடா, சர்வதேச அளவில், பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான உடன்படிக்கை மற்றும் அனைத்து விதமான இனப் பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை ஆகிய இரண்டு உடன்படிக்கைகளிலும் கையெழுத்திட்டுள்ளது.

இந்த சர்வதேச உடன்படிக்கைகள், பெண் வெறுப்பு அல்லது இனவெறி வெறுப்புப் பேச்சைத் தூண்டுவதற்கு எதிராக அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோருகின்றன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

---

## அல்பெர்ட்டா...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் துணைப் பிரதமர் தாமஸ் லுகாசுக் தலைமையிலான ‘போரெவர் கனடியன்’ என்ற குழு, அல்பெர்ட்டா கனடாவுடனேயே இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஏற்கனவே 4.56 லட்சம் கையெழுத்துகளைச் சமர்ப்பித்துள்ளது.

வாக்காளர்களின் தனிப்பட்ட விவரங்கள் சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்டன என எழுந்துள்ள புகாரைத் தொடர்ந்து, இந்த மனுவில் உள்ள கையெழுத்துகளை மிகவும் தீவிரமாகச் சரிபார்க்கப் போவதாகத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

கையெழுத்துகளின் உண்மைத் தன்மை உறுதி செய்யப்பட்ட பிறகு, இந்த மனு மாகாண சட்டசபையின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இதன் மூலம் கனடா அரசியலில் ஒரு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.




# கனடாவில் தீவிரவாதப் பாதையில் சிறுவர்கள் உளவுத்துறை அறிக்கையில் எச்சரிக்கை விடுப்பு

கனடாவில் இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் மத்தியில் தீவிரவாதக் கருத்துக்கள் பரவி வருகின்றமை குறித்து கனடிய உளவுத்துறை தனது 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

13 வயது சிறுவர்கள் கூட தற்போது உளவுத்துறையின் தீவிரவாத எதிர்ப்பு விசாரணை வளையத்திற்குள் வந்துள்ளனர்.

உளவுத்துறை மேற்கொள்ளும் ஒவ்வொரு 10 விசாரணைகளிலும், குறைந்தது ஒரு விசாரணையாவது 18 வயதிற்குட்பட்ட சிறுவர்களை உள்ளடக்கியதாக உள்ளது.

தீவிரவாதச் செயல்களில் ஈடுபட முயன்றமை தொடர்பில் 2023 இல் 5 பேரும், 2024 இல் 2 பேரும், 2025இல் 4 சிறுவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

"இது வியப்பளிக்கவில்லை, ஆனால் கவலையளிக்கிறது. இணையம் மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள் வழியாக சிறுவர்கள் எளிதில் குறிவைக்கப்படுகிறார்கள்." என முன்னாள் உளவுத்துறை அதிகாரி நீல் பிஸன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர்கள் எதைப் பார்க்கிறார்கள், யாருடன் பேசுகிறார்கள் என்பது அவர்களின் மனநிலையை மாற்றுகிறது என குறிப்பிட்டுள்ளார்.

சமூக வலைதளங்கள், 'என்க்ரிப்ட்' செய்யப்பட்ட 'மெசேஜிங் ஆப்ஸ்' மற்றும் 'ஒன்லைன் கேமிங்' தளங்கள் வழியாக சிறுவர்கள் தீவிரவாதக் கருத்துக்களால் ஈர்க்கப்படுகிறார்கள் என சைபர் பாதுகாப்பு நிபுணர் ரித்தேஷ் கோடக் குறிப்பிட்டார்.

'ஒன்லைன்' நிறுவனங்கள் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய போதுமான நடவடிக்கைகளை எடுப்பதில்லை என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

# ஓடும் பொலிஸ் வாகனத்திலிருந்து தப்பிச்செல்ல முயன்ற நபர் காயம்

கனடாவின் எல்.ஜி.ன். கவுண்டி பகுதியில், பொலிஸ் காவலில் இருந்த நபர் ஒருவர் ஓடும் வாகனத்திலிருந்து தப்பித்து, பின்னர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மாகாணத்தின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு விசாரணையைத் தொடங்கியுள்ளது.

கடந்த சனிக்கிழமை மதியம் சுமார் 12:15 மணியளவில், எல்.ஜி.ன். கவுண்டி ஓ.பி.பி. மற்றும் செயின்ட் தாமஸ் பொலிஸ் அதிகாரிகள் இணைந்து ஒரு நபரை வாகனத்தில் அழைத்துச் சென்றபோது இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

வெலிங்டன் வீதி மற்றும் டால்போட் சாலை சந்திப்புப் பகுதியில் வாகனம் சென்றுகொண்டிருந்தபோது, அந்த நபர் எதிர்பாராத விதமாக ஓடும் வாகனத்திலிருந்து குதித்து தப்பி ஓடியுள்ளார்.




இதனைத் தொடர்ந்து, அந்த நபரைப் பிடிக்க மோப்ப நாய்கள், ஹெலிக்கொப்டர் மற்றும் அவசரக்காலப் பதிலடி குழுக்கள் உள்ளிட்ட பல பிரிவினர் ஈடுபடுத்தப்பட்டு தீவிர தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

அந்தப் பகுதியில் பொதுமக்கள் நடமாடுவதைத் தவிர்க்குமாறு எச்சரித்த பொலிஸார், வாகன சாரதிகள் எவரையும் ஏற்றிச் செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தினர்.

நீண்ட தேடுதலுக்குப் பிறகு, செயின்ட் தாமஸ் பகுதியில் உள்ள மேஜர் லைன் அருகே அந்த நபர் மீண்டும் பிடிபட்டார்.

எனினும், அவர் காயமடைந்திருந்ததால் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

பொலிஸின் விசாரணையின் போது ஒருவருக்குக் காயம் ஏற்பட்டால், அது குறித்து எஸ்.ஐ.யு. விசாரணை நடத்துவது கட்டாயம் என்பதால், இந்த விவகாரம் தற்போது அவர்களின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, மேலதிக தகவல்களை வழங்க பொலிஸ் மறுத்துவிட்டது.